**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 312/2022**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி –1 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அருண். | ஜாதி | |
| தந்தை பெயர் | கண்ணுச்சாமி | தொழில் | ஆட்டோ ஓட்டுநர். |
| கிராமம் | பாலார்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 35/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, பாலார்பட்டியில் குடியிருந்துகொண்டு, ஆட்டோ ஓட்டுநராகப் பணிசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர். கடந்த 10.01.2021 ஆம் தேதியன்று, இரவு 07.00 மணியளவில் எனது அண்ணன் செல்வேந்திரனுக்கு பாலார்பட்டிக்கு அருகே விபத்து நடந்ததாக உங்கள் ஊரைச் சேர்ந்த நபர்கள் எனக்குப் போன் செய்தார்கள். நான் சம்பவயிடத்திற்குச் சென்று பார்த்தபோது, என் அண்ணனுக்கு, வாய், மூக்கு மற்றும் பின்னந்தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர் என் அண்ணனைப் பரிசோதித்துவிட்டு, அவர் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். அதுசம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. விபத்து குறித்து விசாரித்தபோது, எங்கள் ஊரில் டீக் கடையில் இருந்த காசிமாயன், மற்றும் ஒரு நபரின் பெயர் தெரியவில்லை. மேற்படி இருவரும், உப்புக்கோட்டையிலிருந்து என் அண்ணன் இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு வந்தார் என்றும், பாலார்பட்டியிலிருந்து ஆஜர் எதிரி உப்புக்கோட்டை செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும் இரண்டு

வாகனங்களும் நேரில் மோதிக்கொண்டதால், விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) வழக்கில் இறந்து போன நபர் எனது சித்தப்பா மகன் ஆவார். விபத்து நடந்த சமயத்தில் நான் வீட்டிலிருந்தேன். சம்பவ இடத்திலிருந்து எனது வீடு 10 நிமிடத்தில் செல்லும் தூரத்தில் அமைந்துள்ளது. எனக்கு யார் சம்பவம் சம்பந்தமாக தகவல் சொன்னது என்றால், அண்ணாத்துரை மற்றும் காசிமாயன் தகவல் கூறினார்கள். நான் சம்பவ இடத்திற்குச் செல்லும்போது, சுமார் 07.00 மணியிருக்கும். நான் சென்றபோது, சம்பவயிடத்தில் சுமார் 10 அல்லது 15 நபர்கள் கூடியிருந்தார்கள். 108 ஆம்புலன்சுக்கு யார் தகவல் கூறினார்கள் என்றால், அங்கு கூடியிருந்த நபர்களில் யாரோ ஒருவர் தகவல் தெரிவித்திருக்கிறார். ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வரும்போது சுமார் 07.00 மணியிருக்கும். எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. க.விலக்கு மருத்துவமனைக்கு நான், என் அண்ணன் மனைவி கௌசல்யா ஆகியோர்கள் அழைத்துச் சென்றோம்.

(2) மருத்துவமனைக்கு எத்தனை மணிக்குச் சென்றோம் என்றால் 08.00 மணியிருக்கும். நான் புகாரை காவல் நிலையம் சென்று கொடுத்தேன். நான் புகார் கொடுக்கச் சென்றபோது, 10.00 மணியிருக்கும். நான் புகார் கொடுத்ததை போலீசார் எழுதிக்கொண்டார்கள். நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன். நான் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து புகார் கொடுக்கவில்லை என்றாலும், நான் எழுதப்படாத வெற்றுப் பேப்பரில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.13 20:32:03 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**